வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 5.2.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நடப்பு நூற்றாண்டின் அடுத்த 25 ஆண்டுகள், இந்தியாவின் காலமாக இருக்கும் என்று மாநிலங்களவையில், பிரதமர் திருநரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்களவையில், குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், இன்று நிறைவேற்றப்பட்டது.

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், செயற்கை நுண்ணறிவின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்று, இண்டியா-ஏஐ இயக்கத்தின் தலைமை செயல் அதிகாரி திரு அபிஷேக் சிங் கூறி உள்ளார்

புதுச்சேரி உட்பட 5 மாநில சட்டமன்ற தேர்தலின் போது பார்வையாளர்களாக பணியில் ஈடுபட உள்ள அதிகாரிகளுக்கு, தேர்தல் ஆணையம் இன்று புதுடெல்லியில் விளக்க கூட்டம் ஒன்றை நடத்தியது.

*மோடி-மாநிலங்களவை*

உலக அரங்கில் வேகமாக வளரும் நாடு இந்தியா என்றும், நடப்பு நூற்றாண்டின் அடுத்த 25 ஆண்டுகள், இந்தியாவின் காலமாக இருக்கும் என்றும் பிரதமர் திருநரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று மாநிலங்களவையில், குடியரசு தலைவரின் நாடாளுமன்ற உரைக்கு நன்றி

தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களுக்கு பதில் அளித்த அவர், சர்வதேச சமூகத்திற்கு பிரச்சனை ஏற்படும் போது அதை தீர்க்கும் வல்லமை கொண்ட நாடாக இந்தியா திகழ்வதாக கூறினார். இந்தியாவின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். 2014-ல் உலக பொருளாதார நாடுகளின்பட்டியலில் 11-ஆவது இடத்தில்இருந்த இந்தியா, தற்போது 3-ஆவது இடத்திற்கு முன்னேறி இருப்பதாகவும், வளர்ந்த நாடுகள் கூட பல நெருக்கடிகளை சந்திக்கும் நிலையில் இந்தியா தனித்துவமாக முன்னேறி வருவதாக அவர் குறிப்பிட்டார். இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் இளைஞர்களின் பங்கு, மிக முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் கூறினார். மாநிலங்களவையில் பிரதமரின் பதில் உரை தொடங்கிய உடனேயே, எதிர்கட்சிகள் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பிய வண்ணம், அவையில்இருந்து வெளியேறின.

முன்னதாக, குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது இன்று மாநிலங்களவையில் தொடர்ந்து நடைபெற்ற விவாதங்களில், பிஜேபி உறுப்பினர் திருமதி மாயா நரோலியா, ஆம் ஆத்மி கட்சியின் திரு எஸ்கே பாதக், தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த திரு கே கே சுரேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றுப் பேசினர்.

*மக்களவை- தீர்மானம்*

நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும்

தீர்மானம் இன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. முதலாவது ஒத்தி வைப்பிற்கு பின்னர் நண்பகல் 12 மணிக்கு அவை மீண்டும் கூடிய போது, தீர்மானம் மீதான எதிர்கட்சிகளின் திருத்தங்கள் வாக்கெடுப்பு மூலம் நிராகரிக்கப்பட்டு, எதிர்கட்சிகளின் அமளிக்கு இடையிலேயே குரல் ஓட்டு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னரும் எதிர்கட்சிகளின் அமளி நீடித்ததால், மக்களவையின் அலுவல்கள் பிற்பகல் 2 மணி வரையிலும், தொடர்ந்து 3 மணி வரையிலும், பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. எதிர்கட்சி உறுப்பினர்களின் அமளி காரணமாகவே நேற்று மக்களவையில் பிரதமர், விவாதங்களுக்கு பதில் அளிக்க இயலவில்லை என்று சபாநாயகர் திரு ஓம் பிர்லா, முன்னதாக அவையில் கூறினார். விரும்பத் தகாத சூழலை தவிர்க்கும் வகையில் அவைக்கு வர வேண்டாம் என பிரதமரை தாமே கேட்டுக் கொண்டதாக அவர் தெரிவித்தார்.

மோடி-கட்டுரை

தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கான பிரதமரின் பரிஷா-பே-சர்ச்சா நிகழ்ச்சி குறித்து, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான எழுதியுள்ள கட்டுரை ஒன்றை பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். முன்னேறிய இந்தியாவிற்கு வழி வகுக்கும் வகையில், நாட்டின் கல்விப் பயணத்தில் முக்கிய மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான தேசிய இயக்கமாகவே இந்நிகழ்ச்சி

மேம்பட்டுள்ளது குறித்து, அமைச்சரின் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் கூறி உள்ளார்.

*கோயல்*

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உடன்பாட்டின் முதலாவது பகுதி அநேகமாகத் தயாராகி விட்டதாக மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம்பேசிய அவர் இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டறிக்கை 4-5 நாட்களுக்குள் இறுதி செய்யப்பட்டு கையெழுத்தாகும் என இந்தியா எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். கூட்டறிக்கை இறுதியான பின்னர் வரி விதிப்பை 18 சதவிகிதமாக குறைப்பதற்கான நிர்வாக உத்தரவை, அமெரிக்கா பிறப்பிக்கும் என்றும் அவர் கூறினார்.

*பாரத் டாக்சி*

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுடெல்லியில், கூட்டுறவு முறையிலான பாரத்-டாக்சி சேவை தளத்தை முறைப்படி தொடக்கி வைத்தார். கூட்டுறவு மூலம் வளர்ச்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ள இப்புதிய வசதி, மக்களை மையமாகக் கொண்ட போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதில் முக்கிய நடவடிக்கையாக அமைகிறது. இதுகுறித்து கூடுதல் தகவல்கள்..........

(வாய்ஸ்)

தனியார் வாடகைகார் ஒருங்கிணைப்பு நிறுவனங்களின் பிடியில் இருந்து டாக்சி ஓட்டுனர்களை விடுவித்து, லாபத்தை ஓட்டுனர்களுக்கு பகிர்ந்து அளிக்கும் வகையில் பாரத் டாக்சி தளம் உருவாக்கப்பட்டுள்ளது. ஓட்டுனர்களுக்கான விபத்துக் காப்பீடு, மருத்துவ சிகிச்சை மற்றும், ஓய்வூதிய வசதிகளும் இதில் இடம் பெற்றுள்ளன. பெண் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பெண் ஒட்டுனர்களைக் கொண்டே வாகனங்களை இயக்குவதற்கான சாரதி தீதி, பைக் தீதி திட்டங்களும் புதிய தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மாநிலங்களுக்கு இடையிலான கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாரத் டாக்சி தளம், கூட்டுறவு முறையில் செயல்படக்கூடிய, உலகின் முதலாவது மற்றும் மிகப் பெரிய வாடகை கார் ஒருங்கிணைப்பு தளமாக அமைந்திருப்பதும், ஏற்கனவே சுமார் 4 லட்சம் ஓட்டுனர்கள், மற்றும், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பயனர்கள் இதில் பதிவு பெற்றுள்ளதும் குறிப்பிடத் தக்கது.. அடுத்த 2 ஆண்டுகளுக்குள் நாட்டின் அனைத்து மாநிலங்கள் மற்றும் நகரங்களுக்கும் இந்த வசதியை நீட்டிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*ஏஐ மாநாடு*

செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்து புதுடெல்லியில் நடைபெற உள்ள உச்சி மாநாடு, மக்கள்-பூமி-முன்னேற்றம் ஆகிய 3 முக்கிய தூண்கள் மீது கட்டமைக்கப் பட்டுள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கூடுதல் செயலரும், இண்டியா-ஏஐ

இயக்கத்தின் தலைமை செயல் அதிகாரியுமான திரு அபிஷேக் சிங் கூறி உள்ளார். இதுகுறித்து கூடுதல் தகவல்கள்........

(வாய்ஸ்)

அனைவருக்குமான செயற்கை நுண்ணறிவு என்பது குறித்து இந்திய தொழில்கள் கூட்டமைப்பு சார்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மாநாட்டில் திரு அபிஷேக் சிங் பேசுகையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளில், தகவல் தொழில் நுட்பம் முக்கிய பங்காற்றி வருவதாகவும், கல்வி, மருத்துவம், வேளாண்மை போன்ற முக்கிய துறைகளில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை அதிகரிக்க மேலும் பல வாய்ப்புகள் இருப்பதாகவும் கூறினார். தற்போது உலகின் தொழில் நுட்பக் கூடமாகவே, இந்தியா செயல்பட்டு வருவதாகவும், 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை எட்டுவதில் செயற்கை நுண்ணறிவின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் கூறினார். அதிநவீன் தொழில் நுட்பங்களுக்கான நிதி ஆயோக் மையத்தின் தலைமை வடிவமைப்புக் கலைஞர் திருமதி தேப்ஜானி கோஷ் இம்மாநாட்டில் பேசுகையில், செயற்கை நுண்ணறிவுத் திறன், மக்களிடையே எந்த அளவிற்கு பரவலாக உள்ளது என்பதைப் பொறுத்தே, இத்துறையில் நாட்டின் வெற்றி அமையும் என்றார்.

*தேர்தல் ஆணையம்*

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட 5 மாநிலங்களில் வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலின் போது பொதுப் பார்வையாளர், போலீஸ்

பார்வையாளர் மற்றும் செலவினப் பார்வையாளர்களாக பணியில் ஈடுபட உள்ள அதிகாரிகளுக்கு, தேர்தல் ஆணையம் இன்று புதுடெல்லியில் விளக்க கூட்டம் ஒன்றை நடத்தியது. இந்த அதிகாரிகளே தேர்தலின் போது, தேர்தல் ஆணையத்தின் சுடர் விளக்காக திகழ்வார்கள் என்றும், இவர்களின் இருப்பினால் தேர்தல் இயந்திரம் முற்றிலுமாக புத்தாற்றல் பெறும் என்றும், தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ் குமார், இக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார். தேர்தல்கள்,சுதந்திரமாகவும், நியாயமாகவும் வெளிப்படையான முறையிலும் நடப்பதை, தேர்தல் ஆணையப் பார்வையாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

*ரங்கசாமி-திட்டம்*

புதுச்சேரியில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை சார்பில், திருக்காஞ்சியில் இன்று மாலை நடைபெறும் விழாவில், முதியோர்-ஆதரவற்றோர் ஓய்வூதியத் திட்டம், மற்றும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்ப தலைவிகளுக்கான மாதாந்திர நிதி உதவித் திட்டத்தில், உயர்த்தப்பட்ட நிதி உதவி வழங்கும் பணிகளை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திருரங்கசாமி ஆகியோர் தொடக்கி வைக்கின்றனர். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு லட்சுமி நாராயணன், திரு ஜெயக்குமார், திரு திருமுருகன், திரு ஜான்குமார், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு ஏகேடி ஆறுமுகம், மற்றும்,

தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் விழாவில் கலந்து கொண்டனர்.

*காரைக்கால்-பயிற்சி*

அரசு ஊழியர்களின் பணித் திறனை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு செயல்படுத்தி வரும் மிஷன் கர்மயோகி திட்டத்தின் கீழ் காரைக்காலில், பெருந்தலைவர் காமராஜர் நிர்வாக வளாகத்தில் இன்று நடைபெற்ற ஒருநாள் பயிற்சி பட்டறைக்கு சார்பு ஆட்சியர் பூஜா தலைமை ஏற்றார். அரசு ஊழியர்கள், iGOT இணையதளத்தில் தங்களை பதிவு செய்து கொண்டு, பணி சார்ந்த பாட நெறிகளை தேர்ந்தெடுத்து கற்பது குறித்து, விரிவான செயல்முறை விளக்கம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு துறையின் தேவைகளுக்கு ஏற்ப, பிரத்யேக திறன் மேம்பாட்டு திட்டங்களை உருவாக்குதல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அரசு ஊழியர்களிடையே தொழில்நுட்பம் மற்றும் தலைமைத் துவ பண்புகளை வளர்ப்பதன் மூலம் மக்களுக்கான சேவைகளை திறம்பட்ட முறையில் வழங்கும் நோக்கத்துடன், இப்பயிற்சி அளிக்கப்பட்டது. பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

*வானிலை*

இன்று தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும், லேசானது முதல்மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை முதல், வரும் 11-ஆம் தேதி வரை,

தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலை நிலவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனி மூட்டம் காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் மணிக்கு 65 கிலோ மீட்டர் வேகத்தில் சூறைக் காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் குறைந்த பட்சமாக கொடைக்கானலில் 7.7 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்*

மகளிர் கிரிக்கெட்டில், வதோதராவில் இன்று மாலை நடைபெறும் WPL இறுதிப் போட்டியில், பெங்களூர்-டெல்லி அணிகள் மோத உள்ளன. WPL இறுதிப் போட்டியில் இவ்விரு அணிகளும் மோதுவது இது இரண்டாவது முறையாகும். 2024- WPL இறுதிப் போட்டியில், பெங்களூர் அணி, 8 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லி அணியை தோற்கடித்து, சாம்பியன் பட்டம் வென்றது.

*மாநிலங்களவை நிலுவை வழக்கு*

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை குறைக்க மத்திய அரசு விரிவான முறையில் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வருவதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் கூறி உள்ளார். இன்று மாநிலங்களவையில் துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர்,

மூன்றாம் கட்ட இ-நீதிமன்றங்கள் திட்டத்திற்கு, மத்திய அரசு 7 ஆயிரத்து 210 கோடி ரூபாய் வழங்கி இருப்பதாகவும், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில் நுட்பங்களின் அடிப்படையிலான புதிய வசதிகளை நீதித் துறையில் உருவாக்க, இந்த நிதி உதவிகரமாக இருக்கும் என்றும் கூறினார். நாடு முழுவதும் மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றங்களில் அனுமதிக்கப்பட்ட நீதிபதி பதவிகளின் எண்ணிக்கை, 2014-ஆம் ஆண்டில் சுமார் 19 ஆயிரத்து 500-ஆக இருந்த நிலையில் தற்போது இது, 25 ஆயிரத்து 893-ஆக உயர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

*மாநிலங்களவை-பாரத் ஜென்*

நவீன டிஜிட்டல் யுகத்திற்கு ஏற்ற நிர்வாகம் மற்றும் பொது சேவைகளை மக்களுக்கு வழங்கும் வகையிலான பாரத்-ஜென் செயற்கை நுண்ணறிவு தளத்தில், அரசியல் சாசனத்தின் 8-ஆவது பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்து 22 மொழிகளையும் சேர்க்க அரசு திட்டமிட்டுள்ளதாகவும், இம்மாத இறுதிக்குள் இத்திட்டம் பூர்த்தியாகும் என்றும், மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். பாஷினி, ஆதிவாணி போன்ற டிஜிட்டல் வசதிகளிலும், இந்த 22 மொழிகள் மற்றும் பல்வேறு வட்டார மொழிகளை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

செஷேல்ஸ்

5 நாள் பயணமாக மனைவியுடன் இந்தியா வந்துள்ள செசேல்ஸ் அதிபர் டாக்டர் பேட்ரிக் ஹர்மினி, இன்று சென்னையில், சிம்ஸ் மருத்துவமனை மற்றும் பாலாஜி பல் மருத்துவமனையை பார்வையிடுகிறார். இன்று இரவு சென்னையில் தங்கிய பின்னர் நாளை தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவியை அவர் சந்திக்கிறார். நாளை மறுநாள் மும்பையில் மகாராஷ்டிர ஆளுநரை சந்தித்த பின்னர், அவர் டெல்லி சென்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, மற்றும் பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துகிறார். செசேல்ஸ் அதிபரின் இந்திய பயணம், இருநாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவுகளின் பொன் விழாக் கொண்டாடங்களை ஒட்டியதாக அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நடப்பு நூற்றாண்டின் அடுத்த 25 ஆண்டுகள், இந்தியாவின் காலமாக இருக்கும் என்று மாநிலங்களவையில், பிரதமர் திருநரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்களவையில், குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், இன்று நிறைவேற்றப்பட்டது.

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், செயற்கை நுண்ணறிவின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்று, இண்டியா-ஏஐ இயக்கத்தின் தலைமை செயல் அதிகாரி திரு அபிஷேக் சிங் கூறி உள்ளார்

புதுச்சேரி உட்பட 5 மாநில சட்டமன்ற தேர்தலின் போது பார்வையாளர்களாக பணியில் ஈடுபட உள்ள அதிகாரிகளுக்கு, தேர்தல் ஆணையம் இன்று புதுடெல்லியில் விளக்க கூட்டம் ஒன்றை நடத்தியது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/5.2.2026/Script/

-----------------------------